தினமலர்
கோயம்புத்தூர் | ஞாயிறு | 15.3.2020

# உழவர் சந்தை போல் மரச்சந்தை

## கோவை விவசாயிகள் எதிர்பார்ப்பு

**கோவை, மார்ச் 15–**

'உழவர் சந்தையை போல், மரவளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்காக மரச்சந்தை அமைத்து, சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்' என, கருத்தாய்வு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கோவை வனமரபியல் மற்றும் வன விரிவாக்க மையத்தில், கருத்தாய்வு கூட்டம் நடந்தது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர் கண்ணன், 'ஒப்பந்த சாகுபடி சட்டம்–2019 மற்றும் உழவர் உற்பத்தியாளர்களுக்கான பிரத்யேகமான அரசின் கொள்கை' என்ற தலைப்பிலும, விஞ்ஞானி பன்னீர் செல்வம், 'பழங்குடியினரின் பாரம்பரிய மூலிகை மருத்துவ முறை' என்ற தலைப்பிலும் விளக்கினர். இதில், உழவர் உற்பத்தியாளர் நிறுவன சி.இ.ஓ., நாராயணசாமி பேசியதாவது:

இந்திய வன ஆய்வு நிறுவனம், 2019ல் நடத்திய ஆய்வில், வனப்பரப்பு அதிகரித்திருப்பது தெரியவந்தது. தமிழகத்தில் வனப்பகுதிக்கு வெளியே, தென்னை–27.8 சதவீதம், வேம்பு–12, பனை–11, மாமரம்–5, தேக்கு–4.35, முருங்கை–5 சதவீதம் என்ற அளவில் வளர்க்கப்படுகிறது.

மரங்கள் வளர்ப்பில் அதிக ஆர்வம் இருந்தாலும், உரிய சந்தை வாய்ப்பு இன்மையால் சிரமங்கள் உள்ளன. உழவர் சந்தை போல், மரம் வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவும் வகையில், தமிழகத்தில் குறிப்பிட்ட இடங்களை தேர்வு செய்து மரச்சந்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம், மரம் வளர்க்கும் விவசாயிகள் மரங்களாகவோ, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாகவோ நேரடியாக விற்பனை செய்துகொள்ள இயலும். இவ்வாறு, அவர் கூறினார்.

கோவை, பொள்ளாச்சிக்கு உட்பட பகுதிகளை சேர்ந்த மரம் வளர்ப்பு விவசாயிகள் பங்கேற்றனர்.